அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார்
# சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு ஐப்பசி - கார்த்திகை டிசம்பர் 2016 முரசு 10 ஒலி 114



## திருஅருட்பா

அருட்ஜோதி ஆனேன்என்று அறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேன்என்று அறையப்பா முரசு
மருட்சார்பு தீர்த்தேன்என்று அறையப்பா முரசு
மரணம் தவிர்த்தேன்என்று அறையப்பா முரசு

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்

## பசித்திரு! தனித்திரு! விழித்திரு!



## இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

சுருள்விரிவுடை மனச்சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி அகவல்

**நாள்:** டிசம்பர் 23, 24 & 25 வெள்ளி, சனி, ஞாயிறு
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்:** வள்ளலார் சத்திய யோக சாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

இந்த பயிற்சி முகாமில்...

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானங்கள்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 80 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு: 94434 89849, 98652 29035
அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை,
திருவண்ணாமலை.

அன்பு உள்ளங்களே! நாம் இப்பூவுலகில் ஆனந்தமாக வாழ்வதற்கே பிறந்திருக்கின்றோம். அதற்கு நம் உடல், மனம், உயிர் இம்மூன்றும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த மூன்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு பஞ்ச பூதங்களினின்று நமக்குக் கிடைக்கும் சக்திகள் நம் உடலில் சரியான விகிதத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

இவைகளில் எது ஒன்று குறைந்தாலும் அதற்கு ஏற்பவே உடல் அல்லது மனதில் துன்பங்கள் வரும். இவைகளை சரிசெய்து கொள்வதற்கு பஞ்ச பூதங்களிலிருந்து சக்தியைப் பெறும் முறையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்த இடத்திலிருந்தே இச்சக்திகளைப் பெற்றுக்கொள்ளும் இயற்கை இரகசியங்களை நம் வள்ளல் பெருமானார் கண்டு கொண்டார்கள். அதன்மூலம் எல்லாச் சக்திகளையும் பெற்றார்கள். அதற்கு சில ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொண்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். உலகம் தழைக்க வந்துதித்த நம் வள்ளல் பெருமான் கண்ட இவ்வொழுக்க நெறிமுறைகளை எல்லா மக்களுக்கும் அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டதே. "*ஆழ்நிலை தியான முகாம்*"

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் டிசம்பர் 22-ஆம் தேதி வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: T.ஷர்ட், டிராக்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். இடையில் செல்லவோ அல்லது கலந்து கொள்ளவோ அனுமதி இல்லை.
6. டிசம்பர் 25 ஞாயிறு மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

---

**பஸ் ரூட்:**

*பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58*
*(கடைசி பஸ் இரவு 9:30க்கு)*
*உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)*

# மானுடராதல் அரிது

நமது அருள்பூரண சித்தியோக முகாமிற்கு வந்த அன்பர் ஒருவர் "ஐயா இந்த உலகத்தில் மதச் சண்டை, ஜாதிச் சண்டை என அடித்துக் கொண்டு மாண்டுபோகின்றார்களே. இதற்கு தீர்வுதான் என்ன?" என்று கேட்டார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனிதயினத்துக்கு ஒரு போலி நம்பிக்கை உள்ளது. மற்றவர்கள் சொல்லியுள்ள கருத்துக்களைச் சேர்த்து மூட்டை கட்டிக் கொண்டால், ஞானம் எய்தி விடலாம் என்பதே அது. இது முற்றிலும் ஆதாரமற்ற போக்கு. பொய்.

மற்றவர்கள் ஆத்மஞானம் பற்றி சொல்லியிருக்கும் கருத்துக்களை எல்லாம் மண்டையில் ஏற்றிக்கொண்டு, மெய்ஞ்ஞானத்தை ஒருவராலும் எட்டிப் பிடித்துவிட முடியாது. ஞான அறிவு உள்ஜோதியிலிருந்து உதயமாகிறது. மாறாக கருத்துக்களோ, வெளிச் செய்திகளிலிருந்து கிடைக்கின்றன.

ஒருவன் கிணறு வெட்டுகிறான். முதலில் அவன் மண்ணையும் கற்களையும் வெளியில் எடுத்தெறிகிறான். பிறகு நாற்புறமுள்ள கிணற்றுச் சுவர்களிலிருந்து தண்ணீர் தானாக கசிந்தொழுகுகிறது. அப்படியே அது கிணற்றினை நிறைத்துவிடுகிறது. தண்ணீர் முன்னமே அங்கேயேதான் இருந்துள்ளது. வெளியில் வேறு எங்கிருந்தோ நீரை கொண்டு வரவேண்டிய தேவை கிடையாது. கொஞ்சம் கற்களையும், சில மணற்திட்டுகளையும் அகற்ற வேண்டிய தேவையிருந்தது. சில தடைகள், சில இடையூறுகள் இருந்தன. அவை அகற்றப்பட்ட கணமே நீர் தென்பட்டது. கிணற்றுக்குள் நீரைக் கொண்டு வந்து கொட்ட வேண்டிய அவசியம் இல்லை. நீர் அங்கேதான் இருந்துள்ளது. வழிமறித்த சில இடைஞ்சல்களைக் களைய வேண்டியிருந்தது, அவ்வளவே.

ஞானம், ஏற்கனவே நம் உள்ளே இருக்கிறது. வேறெங்கிருந்தோ அதனைக் கொண்டு வர வேண்டாம். ஞான ஊற்றுக்கண்கள் உள்ளே மறைந்துள்ளன. சில வழிமறிப்புகளும் கற்களும், மண் திட்டுக்களும் தோண்டிக் களையப்பட வேண்டும். பிறகு ஞானத்தின் உற்பத்தி ஸ்தானமான ஊற்றுக்கண்கள் தென்பட ஆரம்பிக்கும்.

ஒருவன் கிணற்றையும் வெட்டலாம். குளத்தையும் வெட்டலாம். கிணறு மற்றும் குட்டை, குளம் இவற்றை உருவாக்குதல் சற்று வித்தியாசமானது.

குளம் வெட்ட, தண்ணீருக்கான இயற்கையான ஊற்றுக் கண்களைத் தேடிக் கொண்டு போகத் தேவையில்லை. குளம் வெட்டுதல் என்பது, கிணறு வெட்டுவதற்கு முற்றிலும் எதிர்ப்பதமானது. குளம் வெட்ட நீங்கள் மண்ணையும் கல்லையும் தோண்டி எடுக்க வேண்டியதில்லை. இவற்றையெல்லாம் வெளியில் வேறெங்கிருந்தாவது கொண்டு வந்து முதலில் சுவரொன்றினை எழுப்ப வேண்டும். சுவரும் தயாராகும். தயாரானதும், தண்ணீர் தானாக ஊறாது. மற்ற இடங்களிலிருந்து தண்ணீரை இறைத்து வந்து நீங்கள்தான் குளத்தை நிரப்பியாக வேண்டும்.

மேலோட்டமாய் எட்டிப் பார்த்தால் ஒரு குளமோ, குட்டையோ கிணற்றைப் போலத்தான் பொய்த்தோற்றம் காட்டும். கிணற்றைப் போலவே தோன்றும் அது. குட்டைக்குள் நீங்கள் தண்ணீரைப் பார்க்கலாம். கிணற்றிலும் நீங்கள் தண்ணீரை பார்க்கலாம். ஆனால் ஒரு கிணற்றுக்கும் குட்டைக்குமான வித்தியாசமானது, வானத்துக்கும் பூமிக்குமான வித்தியாசத்தை ஒத்தது.

முதல் வித்தியாசம்: குட்டைக்கு, அதற்கென்று சொந்தமான தண்ணீர் கிடையாது. இவ்வுலகத்தில், ஒருவனுக்கென்று சொந்தமாய் வேட்கை இல்லாதபட்சத்தில், அவனை எந்த ஞானத்தைக் கொண்டும் அனுபவத்திற்கு கொண்டுவர முடியாது. குட்டையில் என்னவுள்ளதோ, அது கடனாய் பெறப்பட்டது. அது கூடிய விரைவிலேயே வற்றிவிடும். குளத்து நீர் ஓடிப் பாயாமல் மந்தமாக நின்று, நலங்கெட்டுவிடும். எது கடனாகப் பெறப்படுகிறதோ அது உயிர்ப்பற்றது. குட்டையில் அப்படியே தேங்கி நிற்கும் நீர் முடைநாற்றம் பிடித்து, சீக்கிரத்திலேயே சாக்கடையாகிவிடும்.

ஆனால் கிணறு அப்படி கிடையாது. அதற்கென்று நீர்ச்சுனை எப்போதுமிருக்கும். கிணற்று நீர் ஒருபோதும் பாயாமல் நிற்காது. அதற்கென்ற நீர்ப் போக்குவரத்து கிணற்றுக்கு உண்டு. இரு வேறுபட்ட இயக்கங்கள் குட்டையிலும் கிணற்றிலும் நடக்கின்றன.

குட்டையின் தண்ணீர் காய்ந்து விட்டால், அது காலியாகிவிடும். ஆதலால், தனது நீரை யாராவது அள்ளிக் கொண்டு போய் விடுவார்களோ என்ற பயம் குளத்துக்கு எப்போதுமே இருக்கும். ஆனால் கிணறோ தனது தண்ணீரை யாராவது அள்ளிக் கொண்டு போக வேண்டும் என எதிர்பார்க்கும். அப்போதுதான் அதில் புதிய நீர் ஊறும் அது புத்துணர்ச்சியுடன் பொலிவோடிருக்கும்.

கிணறு அழைக்கும்: "வாருங்கள்! எனது தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள். நான் அதனைப் பகிர்ந்து தர விரும்புகிறேன்" என்று.

ஆனால் ஒரு குட்டையோ "தள்ளி நில். என் நீரைத் தொடாதே. என் நீரை எடுக்காதே!" என்று சொல்கிறது.

யாராவது ஒருத்தர் எங்கிருந்தாவது தண்ணீரைக் கொண்டு வந்து தனக்குள் கொட்டி தன்னுடைய நீர்ச் செல்வத்தை பெருக்க வேண்டும் என எண்ணுகிறது குட்டை. ஆனால் யாராவது ஒருத்தர் வாளி ஒன்றினைக் கொண்டு வந்து நின்றால், அவர் தனது தண்ணீரை உடனே அள்ளி எடுத்துவிட வேண்டும் என எதிர்பார்க்கிறது கிணறு. அப்போதுதான் பழைய நீரை வெளியேற்றி விட்டு புதிய நீர்வரத்தினை அனுபவிக்கலாம் என்பது அதன் எண்ணம்.

கிணறு, பகிர்ந்தளிக்க விரும்புகிறது. குளமும் குட்டையும், சேர்த்துப் பதுக்கிக் கொள்ள நினைக்கின்றன.

சமுத்திரத்துடன் இணைப்பில் உள்ள ஊற்றுகளை உள்ளடக்கி உள்ளது கிணறு. பார்க்க கிணறு சின்னதாய் தோன்றினாலும், வெகு ஆழத்தில் அது எல்லையற்ற கீர்த்தியுடன் தொடர்பில் இருக்கிறது. ஆனால் பார்ப்பதற்கு எத்தனைதான் பெரியதொரு குளமாய் தென்பட்டாலும், அதற்கு யாருடனும் உறவு கிடையாது - அது தனக்குள்ளே முடிந்து போகிறது. அதற்கு ஊற்றுகள் கிடையாது. எல்லையற்ற சமுத்திரத்துடன் இணைந்துக் கொள்ள அதற்கு வழிகளே இல்லை.

யாராவது குளத்திடம் போய் சமுத்திரத்தை பற்றிப் பேசினால் அது நகைத்து விட்டு சொல்லும் பதில் இதுதான்: "சமுத்திரம் என்று ஒன்று கிடையவே கிடையாது. அனைத்தும் குட்டைதான். சமுத்திரம் எங்கும் கிடையாது." குளத்துக்கு சமுத்திரம் பற்றிய கருத்துக்களே இருக்காது.

ஆனால் யாராவது கிணற்றின் அழகினை வர்ணித்துப் பேசினால், அது எண்ணிக் கொள்ளும்: "என்னுடையது இதில் என்ன இருக்கிறது? அனைத்தும் கடலிலிருந்து வருகின்றன. என் பங்கு இதில் என்ன? எனக்குள் வந்து விழும் அனைத்தும், வெகு தொலைவிலுள்ள ஒன்றுடன் இணைப்பில் உள்ளன."

கிணற்றுக்கு 'நான்' என்ற தன்முனைப்பு எண்ணமிருக்காது. 'என்னுடையது' என்று திமிராக அது எண்ணாது. ஆனால் குளத்துக்கு ஆணவம் உண்டு. 'நான் என்னுடையது' என்ற அகங்கார எண்ணம் அதற்கு முழுமையாய் உண்டு. இதில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், கிணறு மிகச் சிறிது, குளமோ மிகப் பெரிது. கிணற்றுக்கென்று சொந்தமான பொக்கிஷச் சொத்து உள்ளது. அது குளத்துக்கு இல்லை.

ஒரு மனிதனுடைய புத்தி, குட்டையாக உருவாகலாம் அல்லது ஒரு கிணறாக உருவாகலாம்.

ஒரு மனிதனுடைய புத்தி உருவாவதற்கான இருவேறு சாத்தியக்கூறுகள் இவைதான். இவற்றில், எவனொருவனுடைய புத்தி குட்டையாக வடிவாகிறதோ, அவன் மெல்ல மெல்ல பைத்தியமாகிப் போகிறான்.

நம் அனைவரது புத்திகளும் குட்டைகளாகி விட்டன. நாம் கிணறுகளை உருவாக்கவில்லை. நாம் நம்முடைய புத்திகளில் குளங்களை வெட்டியிருக்கிறோம். குட்டைகளை உருவாக்கியிருக்கி இருக்கிறோம். உலகம் முழுவதிலிருந்தும் நாம் விஷயங்களை சேமிக்கிறோம். புத்தகங்கள், புராண இதிகாசங்கள், போதனைகள் என ஒன்றுவிடாமல் எல்லாவற்றிலிருந்தும் சேமிக்கிறோம். நாமே இப்படிச் சேர்த்து வைத்துவிட்டு, அனைத்தையும் கரைத்துக் குடித்து விட்ட மேதாவியாய் நம்மை நாமே கருதிக் கொள்கிறோம். நாம் அந்தக் குட்டையினைப் போலவே தவறினைச் செய்துள்ளோம். குளம் தன்னை ஒரு கிணறாகக் கருதிக் கொண்டது. இரண்டிலும் தண்ணீர் உள்ளதால், இப்படியொரு பொய்த்தோற்றம் உருவாக வாய்ப்புள்ளது.

கற்றறிந்த மேதமையை பண்டிதர்களிடம் காணலாம். ஆசிரியர்களிடமும் காணலாம். ஞானக்கண் திறந்து விழிப்பெய்திய குருமார்களிடமும், ஞானிகளிடமும் காணலாம். ஆனால் இதில் பண்டிதனோ குட்டை. விழிப்பெய்திய ஞானியோ கிணறு. இவர்கள் இருவருக்கும் இடையே பெரும் வித்தியாசம் உள்ளது. இது எந்த அளவுக்கு ஆழமானதொரு வித்தியாசம் என்பதை இப்போதுள்ள நிலையில் உங்களால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.

பாண்டித்தியம் கொண்ட ஒரு பண்டிதனின் அறிவு, தேங்கி நாற்றம் பிடித்த கழிவுநீர். உலகமெங்கும் ஏற்பட்டுள்ள சமய, மத, ஜாதிப் பிரச்சினைகள் அனைத்துமே இப்படிப்பட்ட அறிவு ஜீவிகளின் அறிவினால்தான் எழுந்துள்ளன. இது படித்துப் படித்து அறிவினைப் பெருக்கிக் கொண்டதனால் நேர்ந்த சண்டை.

உலகமெங்கிலும் ஏற்பட்டுள்ள கலகங்களும் குழப்பங்களும், குட்டையாய் வளர்க்கப்பட்டுள்ள புத்திகளால் நிகழ்ந்துள்ளன. இது நிகழாமல் இருந்திருந்தால் இன்று உலகமெங்கும் மனிதர்கள் மாத்திரமே இருந்திருப்பார்கள்.

குட்டை, தனக்குத்தானே முத்திரை குத்திக் கொள்கிறது. எந்தக் கிணற்றிலிருந்து தண்ணீரை அள்ளி வந்து தனது குளத்தினை நிரப்பிக் கொண்டதோ, அந்தக் கிணற்றின் பெயரை தனக்கும் வைத்துக் கொள்ளும் குட்டைகள் இவை.

தேவையற்ற மணற் திட்டுக்களையும், கற்களையும் பெயர்த்தெடுக்க உதவும் கருவிகளைப் போல ஞானிகளும் குருமார்களும் அருளியுள்ளவற்றை கற்று அதன்படி நடந்து உள்ளூர விழிப்பெய்தியவன், மற்றவர்களிடமிருந்து அறிவைப் பெறுவதில்லை. அவனுள்ளிருந்தே ஞான அறிவு தானாய் சுரக்கும். சுரந்த வண்ணமிருக்கும். அவன் இருப்பிலிருந்தே ஞானம் தெறிக்கும். அப்படிப்பட்டவன் எந்தச் சாதியையும் தழுவமாட்டான், சமயத்தையும் மதத்தையும் கடந்து ஆத்மானுபவத்தில் வாழ்வான். அவனால் ஒரு மதம் சார்ந்து இருக்க முடியாது. அவனே வாய்மை. ஆனால் ஒரு பண்டிதனாலோ ஒரு மதம் சாராது இருக்க முடியாது. எங்கே வேண்டுமானாலும் ஒரு பண்டிதனைப் பாருங்கள், அவன் ஒரு மதத்தினைச் சார்ந்தே நீடிப்பான்.

**"ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவரிடத்திலும் ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவரும் தம்மவர்களாய் சமத்திற் கொள்ளுதல் ஜீவ ஒழுக்கம்"** என்பார் நம் வள்ளல் பெருமானார். மேலும் ஔவை பிராட்டியாரும் **"ஒன்றாகக் காண்பதே காட்சி"** என்பார்.

கிணற்றின் ஊற்றுக்கண் திறப்பதற்கான கருவிகளை கையில் வைத்துக் கொண்டு அதைப் பயன்படுத்தாமல் இருப்பது எத்தனை அறிவீனமோ அவ்விதமே நம் ஞானிகள் அருளியவற்றைக் கற்றிருந்தும் அவ்வழி நின்று அனுபவத்திற்கு வராதவர்களும் காலப்போக்கில் துருப்பிடித்துப் போவார்கள். இவர்களைப் போன்றோர் இருக்கும் வரையில் உலக அமைதி என்பது வெறும் வாய்ச் சொல்லாகத்தான் இருக்கும்.

**திருஅருட்பா**

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்துஅலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே.

# மூத்தோர்சொல் அமிர்தம்

**சி**ல சொற்கள் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகின்றன. ஆனால் உண்மையில் அவற்றின் பொருள் வேறு வேறு. கவனமாகவும், ஆழமாகவும் சிந்தித்தால் மட்டுமே வேறுபாட்டை உணர முடியும்.

உதாரணமாக, சந்தோஷம், ஆனந்தம், இன்பம் என்பவை ஒரே அர்த்தத்தில் பேசப்படுகின்றன. இவை பிழையான பயன்பாடு. தமிழிலும் களிப்பு, மகிழ்ச்சி, நிறைவு என்ற சொற்களை ஒரே பொருளில் கையாளுகிறோம். ஆங்கிலத்தில் Joy, Pleasure, bliss என்பவையும் ஒன்றல்ல, வேறு வேறு நிலைகள் என்று அறிஞர் ஒருவர் விளக்குகிறார்.

களிப்பு(Joy) என்பது முற்றிலும் உடல் சார்ந்தது. "உண்டு களித்திருப்போர்" என்ற பாரதியின் வரிகள் களிப்பு என்பது கள், மது அருந்திக் களிப்பது, பிடித்த இனிப்பை உண்பது என்பதைக் குறிக்கின்றது.

ஆனால் உடலைக் கடந்து மனத்தால் ஏற்படும் அனுபவமே மகிழ்ச்சி. மனமகிழ்ச்சி என்பது பழக்கத்தில் உள்ள சொல். Pleasure எனப்படும் மகிழ்ச்சி மனத்தின் அனுபவம். உடல்சார்ந்த களிப்பை(Joy) விட மகிழ்வு(Pleasure) உயர்வானது. அது எப்படி? ஒரு சங்கீதக் கச்சேரி கேட்கிறோம். ஒரே நேரத்தில் பலரும் மகிழ்வடைய முடியும். ஆனால் களிப்பு அப்படியல்ல. ஒரே ஜாங்கிரி ஆயிரம் பேருக்கும் களிப்பு தரமுடியாது.

ஆனால் ஆனந்தம்(Bliss) என்பது களிப்பு, மகிழ்ச்சி இரண்டையும் விட மேலானது. காரணம் உடல் சார்ந்த களிப்பும் மனம் சார்ந்த மகிழ்ச்சியும் ஒரே நேரத்தில் திகட்டிவிடும். ஜாங்கிரி ஒன்று சாப்பிட்டால் களிப்பு. தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் திகட்டிவிடும். சங்கீதத்தில் ஒரு பாட்டையே திரும்பத் திரும்ப பாடினால் மகிழ்ச்சியாகவா இருக்கும், எரிச்சலாகத்தான் இருக்கும்.

உடலால் பெறுவது களிப்பு, மனத்தில் நிகழ்வது மகிழ்ச்சி இவை இரண்டும் திகட்டிவிடும். ஆனால் ஆனந்தம் அப்படி அல்ல. அது திகட்டாது. உடல் மனம் இரண்டையும் கடந்த நிலையே ஆனந்தம். உடல், மனம் இரண்டிலிருந்தும் விலகி நிற்கும் போதே ஆனந்தம் தழைக்கிறது. அது ஆன்மாவுடன் தொடர்புடையது. அழிவற்றது. அதனால்தான் அதை ஆத்மானந்தம் என்கிறார்கள்.

**ஆனந்தம் என்பது சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களைத் திருப்தியால் சந்தோஷிப்பித்துத் தானதிசயமின்றி நிற்றல். - வள்ளலார்.**

உயிர் இரக்கத்தின் மூலமே இறைவனை அடையமுடியும் என்பதை விளக்க, உலகிற்கே தாய் தந்தையான பார்வதி பரமேஸ்வரர் நடத்திய லீலை.

இமவானின் புதல்வியான பார்வதி, பகவான் சிவனைத் தனது பதியாக அடைவதற்காகக் கடுமையான தவத்தை மேற்கொண்டார். அவரது தவத்தால் மகிழ்ந்த சிவனும் பார்வதிக்குத் தரிசனமளித்தார். பார்வதி தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டவே, அதற்கு சம்மதமளித்து பின் சிவன் மறைந்தார். பார்வதி, ஆசிரமத்திற்கு வெளியில் இருந்த பாறைமீது அமர்ந்திருந்தார். அப்போது ஒரு சிறுவனின் அழுகை குரல் கேட்டது. சிறுவன் உரத்த குரலில், "ஐயா! சிறுவனான என்னை முதலை பிடித்துக்கொண்டது. இது என்னை ஒரே நொடியில் விழுங்கிவிடும். பெற்றோருக்கு நான் ஒரே மகன். யாராவது என்னைக் காப்பாற்றுங்கள். நான் இறந்து கொண்டிருக்கிறேன்" என்று அலறினான்.

சிறுவனின் துயரக் குரல் கேட்ட பார்வதி அத்திசை நோக்கி ஓடினார். அங்கே, ஏரியிலிருந்த முதலை, அழகான சிறுவனை வாயில் கவ்வி இருப்பதைக் கண்டார். பார்வதியைக் கண்டதும் அந்த முதலை, சிறுவனை விரைவாக ஏரியின் ஆழமான பகுதியை நோக்கி இழுத்துச் சென்றது. கலை பொருந்திய சிறுவனின் முகம், பயத்தால் வெளிறி இருந்தது. பரிதாபமான குரலில் அவன் அழுதான். சிறுவனின் நிலையைக் கண்ட பார்வதியின் இதயம் உருகியது. பார்வதி, "முதலை அரசே! தயவு கூர்ந்து சிறுவனை விட்டுவிடு" என்று ஒரு தாய்போல் மன்றாடினார்.

முதலை, 'தேவி! பகலில், இந்த நேரத்தில் என் முன்னால் வரும் எந்த உயிரினமும் எனக்கு உணவாகும். இந்தச் சிறுவன் இந்நேரத்தில் வந்தான். பிரம்மா இவனை எனது உணவு வடிவில் இங்கே அனுப்பியுள்ளார். ஆகவே, இவனை நான் விட முடியாது' என்றது.

பார்வதி, 'முதலையே! இமயமலைச் சிகரத்தில் நான் தவம் செய்துவந்தேன். அந்தத் தவத்தின் பலத்தால் உனக்கு ஆணையிடுகிறேன். சிறுவனை விட்டுவிடு' என்று சற்று சினம் கொண்ட முகத்தவராய் கட்டளையிட்டார்.

முதலை, 'தேவி! நீங்கள் செய்த தவத்தின் பலனை எனக்குத் தருவதாக வாக்களித்தால், நான் சிறுவனை விட்டுவிடுகிறேன்' என்றது.

பார்வதி, 'முதலையே! என் தவத்தின் பலன் மட்டுமல்ல என் வாழ்நாள் முழுவதும் நான் செய்த புண்ணிய செயல்களின் பலன் முழுவதையும் உனக்குத் தருகிறேன். சிறுவனை விட்டுவிடு' என்றார்.

பார்வதி இதைச் சொல்லி முடித்ததும், முதலையின் உடல் தவப்பலனின் மகிமையால் உச்சிவேளை சூரியனைப்போல் ஒளிசிந்தியது. முதலை பார்வதியை நோக்கி, 'தேவி! நீ என்ன காரியம் செய்துவிட்டாய்? சிறிது சிந்தித்துப் பார். எவ்வளவு கஷ்டங்களை சகித்துக்கொண்டு நீ தவம் செய்தாய். அதனால் கிடைத்த தவப்பயனை இப்படித் தியாகம் செய்வது உனக்கு நல்லதல்ல. போகட்டும். துன்பத்தால் வாடுபவருக்கு சேவை செய்யும் உனது உயர்குணத்தை நான் போற்றுகிறேன். உனக்கு நான் வரமளிக்கிறேன் - நீ உனது தவசக்தியைத் திரும்பப் பெற்றுக் கொள். உன்னிடம் சிறுவனையும் நான் ஒப்படைக்கிறேன்' என்றது.

இதைக் கேட்ட பார்வதி, "முதலை அரசே! உயிர் இரக்கம் இல்லாமல் எப்படிப்பட்ட தவம் செய்தாலும், செய்திருந்தாலும் ஒரு பயனும் இல்லை. தவம் செய்ததன் இலட்சணமே தனக்கு எப்படியொரு துன்பம் வந்தாலும் அதைச் சகித்துக் கொண்டு பிற உயிர்களுக்கு நன்மை செய்வதுதான். அதைத்தான் நான் செய்தேன். உனக்கு என் தவ சக்தியையும் அளித்தேன். ஒருவருக்குக் கொடுத்த பொருளை நான் திரும்பப் பெறமாட்டேன். சிறுவனை நீ விட்டுவிடுவதே எனக்குப் போதுமானது. நான் இனியும் தவம் செய்யலாம்" என்றார்.

பார்வதி கூறியதைக் கேட்ட முதலை, சிறுவனை விட்டுவிட்டு மறைந்தது. சிறுவனும் உயிர்பிழைத்தான். பார்வதி, தான் செய்த தவத்தின் பலன் முழுவதும் போய்விட்ட காரணத்தால், மீண்டும் தவத்தில் ஈடுபட முனைந்தார். அப்போது அவர்முன் தோன்றிய சிவன், "தேவி! நீ மீண்டும் தவம் செய்யவேண்டிய அவசியமில்லை. செய்த தவத்தின் சக்தியை நீ எனக்கே தானம் செய்தாய். சிறுவனும் நானே; முதலையும் நானே. உனது உயிர் இரக்கம் மற்றும் தியாகத்தின் சிறப்பு ஆகியவற்றைப் பரிசோதித்துப் பார்க்கவே நான் இந்த லீலை புரிந்தேன். தானத்தின் சிறப்பால் நீ பெற்ற தவத்தின் பயன் ஆயிரம் மடங்காக உன்னை வந்தடைந்துள்ளது. இது என்றும் குறையாது நிலைத்திருக்கும்" என்றார்.

எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை அகற்றியே அச்ச நீக்கிடவும்
செவ்வையுற்று உனது திருப்பதம் பாடிச் சிவசிவ என்று கூத்தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறாது இங்கே ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்.

– திருஅருட்பா

Advertisement

மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி



தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.


வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus ( Free )

OS ( Licenced )







பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!

Old Refurbished New

**BeyondexC Network Solutions**

பியாண்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் அருளிய

# பிண்ட அனுபவ இலக்கணம்

மனித தேகத்தில் கோசத்திற்கு இரண்டரை அங்குலத்திற்கு மேல் நாற்சதுரமான ஒரு பையுண்டு. அதில் 16 வயதளவும் உண்டாகும் இந்திரியம் ஜலமாகச் சேருகின்றது. அதைத்தான் **மானச தடாகம்** என்று சொல்லுகின்றது.

16 வயதிற்கு மேல் சேரும் இந்திரியம் உறைந்த அந்த ஜலத்திற்கு மத்தியில் சேருகிறது. அப்படியாகச் சேர்ந்து கொண்டு வரும் இந்திரியம் பொன் வர்ணமாயிருக்கும். அது **தாமரைப்பூ** என்று சொல்லப்படும். அதன் மத்தியில் ஒரு ஆவி சாதாரண காற்றுக்கு நூற்றில் ஒருபங்காக வெகு நேர்மையாக இருக்கும். அதன் வண்ணம் பொன்மயமாய் இருக்கும். அதற்கு அதிஷ்டான தெய்வம் **பிரம**னென்று சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகும் காலம் அவருக்குச் சகல காலம் என்றும் அடங்கும் காலம் கேவல காலம் என்றும் சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகும் காலத்தில் செயற்கையானால் கருத்தரிக்கும். அது **சிருஷ்டி** என்று சொல்லப்படும்.

அதில் ஆவி உண்டாகத் தொப்புளிலிருந்து ஒரு நாடி தோன்றி அதன் மத்தியில் முகந்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாய் அக்கினி இருக்கின்றது. அது **மூலாக்கினி** என்று சொல்லப்படும். அது தொப்புளிலிருந்து உண்டாவதால் விஷ்ணு தொப்புளில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

அதன்மேல் இரண்டரை அங்குலத்தில் உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பையுண்டு. புசித்த அன்னத்தை ஐந்து நாழிகையில் பால் போன்ற ஜலமயமாய் ருத்திர பாகத்திலுள்ள ஆவி பிரித்து அந்தப் பையில் சேர்க்கிறது. அதை **க்ஷீராப்தி** என்று சொல்லுகிறது. அந்தப் பையிலிருக்கும் பால் போன்ற ஜலத்தின் மேல் ஆலிலை வடிவையுடைய வயிற்றின் உட்பாகம் படிவதனால் அதே வண்ணமாக ஓராடை கட்டியிருக்கும். அதை **ஆலிலை** என்று சொல்லுகின்றது. அந்த ஆடையின் மேல் ஒரு நரம்பு வட்டமாய்த் தலைதூக்கி இருக்கின்றது. அதை **சேஷனென்று** சொல்லுகின்றது. அந்தக் குண்டலி வட்ட சேஷனென்னும் நாடி மத்தியில் செம்பினது களிம்பு போன்ற பச்சை மேனியாய் ஒரு சத்தியுண்டு. அதை விஷ்ணுவென்றும், அச்சத்தியின் முன் பின் நடுவென்னும் இடத்தில் அதன் காரணச் சத்து பொன் வண்ணமாயும், ருத்திர வண்ணமாயும், குங்கும

வண்ணமாயும் மூன்று உள்ளன. அவற்றைச் **சீதேவி, பூதேவி, நீளாதேவி** எனச் சொல்லுகின்றது. மத்தியில் ஒரு சத்தியிருப்பதால் விஷ்ணு **லஷ்மியை மார்பில்** வைத்தாரென்பது.

குண்டலிவட்டமான நாடி மத்தியிலுள்ள பச்சை வண்ணமான சத்தியிலிருந்து ஒரு நாடி உண்டாகி இரண்டு தலையாய் விரிந்து ஒரு தலை மேலும் ஒரு தலை கீழும் செல்லுகின்றது. இந்த நாடிகளின் மூலமாய் அந்தச் சத்து மேலே செல்லும்போது பசுமை வண்ணமாகவும், கீழ்ச் செல்லும்போது பீதவண்ணமாகவும் செல்லுகின்றது. மேலே செல்லுவதினால் ஜீவர்களுக்கு ஜீவிப்பும், அதின் சாரம் கெட்டு கீழே செல்வதினால் ஜீவிப்பின்மையும் உண்டாகின்றது. மேலே செல்லுகின்றதை **விஷ்ணு வைகுந்தம் போகின்றார்** என்றும் கீழே செல்லுகின்றபோது **க்ஷீராப்தியில்** இருக்கின்றாரென்றும் சொல்லுகின்றது. கீழே செல்லும் நாடி முன் சொன்ன தொப்புள் நாடியுடன் கலப்புண்டாகி பிரமனுக்கு உஷ்ணத்தைத் தருகின்றது.

அன்றியும் இந்தச் சதுரமான பையின் வலப்பாகத்தில் ஒரு பையுண்டு. அந்தப் பையில் அக்கினி நிரம்பிக் காரணமாயிருக்கின்றது. அது புசித்த வஸ்துக்களின் சத்தைக் கிரகித்துக் கொண்டு அந்த சத்தை மலமாக இடது பாகத்தில் சேர்த்துவிடுகின்றது. கிரகித்த சத்தை முன் சொன்ன க்ஷீராப்தி பையில் சேர்க்கின்றது. இதை வடவாக்கினி என்று சொல்லுகின்றது. மேலும் இந்த வெள்ளை ஜலத்தை அக்கிரமமின்றிச் சமப்படுத்திப் பிரளயம் வராது காத்துக் கொண்டிருக்கிறது. இந்த உதராக்கினி குறைவுபட்டு க்ஷீராப்தியில் ஜலத்தின் தரம் கெடுமானால் நோயுண்டு.

இந்தப் பையாகிய ஸ்தானத்திற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் இருதயத்தில் மலர்ந்த வாழைப்பூ போல் ஒரு பையுண்டு. அது வெண்மையாயிருக்கும். இதை **கைலாயம்** என்று சொல்லுகின்றது. இந்தப் பையுள் முன் சொன்ன காற்றில் பதினாராயிரம் கோடி பங்கில் ஒருபங்காக வெகு நேர்மையாய் அக்கினி மயமாய் ஒரு ஆவியிருக்கும். இதற்கு காரணாக்கினி என்று பெயர். இவ்வக்கினியைக் கால சந்திர ருத்திர மூர்த்தி என்பர்.

இப்பையின் அருகில் இடப்புறத்தில் மலர்ந்த தாமரைப்பூ போல் ஒரு பையுண்டு. இந்தப் பை பசுமை வண்ணமாயிருக்கும். இதற்கும் முன் சொன்ன வெண்மைப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய் காரணாக்கினி அதிகப்படுத்தாமலும், குறைவு

படுத்தாமலும் சமப்படுத்தி வைக்கும். இந்த மலர்ந்த பசுமை வண்ணப் பைக்கும் கீழிருக்கும் க்ஷீராப்தி பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய் அதற்கு உஷ்ணம் கொடுத்து நிலையில் வைக்கும். இதனால் **ருத்திரனிடத்தில் விஷ்ணு பிறந்ததாய்ச்** சொல்லுகின்றது. இந்த நாடி மூலமாக விஷ்ணு இடமாகிய ஜலத்திலும் பிரமனிடமாகிய இந்திரியத்திலும் உள்ள குற்றங்களைக் கண்டிப்பதால் **ருத்திரனைச் சம்ஹார கர்த்தாவென்று** சொல்வது.

இந்த அக்கினிப் பையில் குண்டலிவட்ட நரம்பு ஒன்று உண்டு. அதில் மூன்றாகப் பிரியும் கிளையுண்டு. அது மூலம் முதல் பிரமரந்திரம் வரையில் இடம் வலம் நடுவென்று கத்தரிமாறலாய்ப் பிராண, அபானனுக்கு இடங்கொடுத்து ஊடுருவி நிற்கும். இந்நரம்புகளுக்குச் **சோம சூரிய அக்கினி** என்று பெயர்.

இஃதன்றி இக்குண்டலிவட்ட நரம்பினடியில் இரண்டு நரம்பு வலத்தில் அஞ்சு கவருடைய தலையாயும், இடத்தில் ஆறு கவருடைய தலையாய் நிற்கின்றன. **வலத்தில்** உள்ளது **கணபதி**யென்றும், **இடத்தில்** உள்ளது **சுப்பிரமணியர்** என்றும் பெயர். மேற்படி ஐந்து கவருடைய நரம்பிற்கு கீழ் நோக்கி கிருஷ்ண வர்ணமாயிருக்கும். இந்த நரம்பு இடைவிடாது அசைந்து கொண்டிருக்கும். இந்த அசைவால் அக்கினிப் பைக்கு ஆதாரம் உண்டாவதால் இதற்கு கணபதி என்று பெயர்.

மேற்படி ஐந்து கவருடைய நாடிக்கு இடம் வலம் இரண்டிலும் சித்தி தத்துவம், புத்தி தத்துவம் உண்டு. இடத்திலுள்ள ஆறு கவருடைய நாடிக்குக் கீழ் அனந்த வண்ணமான நாடி ஒன்றுண்டு. இதற்கு **மயூரம்** (மயில்) என்று பெயர். இந்த நாடியின் அசைவால் எழுபத்தீராயிரம் (72000) நாடியும் அக்கிரமமின்றி நிலைபெறுகின்றபடியால் இதற்கு சேனாதிபதி என்றும் பெயர்.

மேலும் வலது புறத்து நாடிக்கு அறுபத்திரண்டு மாத்திரையும், இடது புறத்து நாடிக்கு நாற்பது மாத்திரையும் அளவு வித்தியாசம் இருப்பதால், இவர்களைச் சகோதரர்களாக சொல்வதுமன்றி, மேற்படி ருத்திராம்சமாகவே சொல்லுகின்றது.

இருதயத்திற்கு மேல் இரண்டரை அங்குல இடமான கண்டத்தில் மகேசுவரனும், அதற்கு மேல் இரண்டரை அங்குல உயரத்தில் புருவமத்தியில் விந்துவும், அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் நாதமும், அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் பரவிந்துவும், அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் பரநாதமும், அதற்கு மேல்

இரண்டரை அங்குலத்தில் திக்கிராந்தம், அதிக்கிராந்தம், துவாதசாந்தம் முதலானவைகளும், அதீதத்தில் சுத்த சிவமும் உள. மகேசுவர ஸ்தானம் முதல் விந்து ஸ்தானம் வரையிலும் முன்போல் இடம், நாடி, தொழில், வண்ணம் முதலியவும் உள. நாதஸ்தானம் தொட்டு துவாதசாந்தம் வரையில் அனுபவ வெளியாகிய ஆகாச பேதமயமாய் இருக்கும். அதற்குமேல் அதிகாரண மாத்திரமாய் ஆன்மானுபவத்தில் விளங்கும்.


மேலும் பிரமஸ்தானம் தொடங்கி சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் உண்டு. அது இருதயம் வரையில் வாயு நாடி வண்ணமாயும் அதற்குமேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும். இது அடியில் பருத்து வரவர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக்கணுவாய், ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக்காட்சியில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்குச் **சிவா காரண பூரண ஸ்தம்பம்** என்று பெயர்.

முன் சொன்ன இருதயாக்கினிப் பை அக்கிரமமாய் விரிந்து, விசேஷ அக்கினி ஜ்வாலை விசிரிம்பித்துக் கீழிருக்கும் க்ஷீராப்திப் பையிலிருக்கும் ஜலத்தை சுருட்டிக்கொள்ள ஜீவனுக்கு மரண காலம் நேரிடும்.


மேற்படி பை விரிவதற்கு ஆதாரம் **அருந்தல், பொருந்தல்** இவை சமமானால் மிருத்தியு வராது.

**உடலுறு பிணியால் உயிருடல் கெடாவகை**
**அடலுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி - அகவல்**

திருச்சிற்றம்பலம்

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன



## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு விளம்பர விபரம்

அன்பர்கள் நமது மாத இதழில் தங்கள் நிறுவனங்கள், கடைகள் தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.

1) முழுபக்க விளம்பரம் - ரூ. 2000

2) அரை பக்க விளம்பரம் - ரூ 1000

3) முன் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

4) பின் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

# திருமுகக் குறிப்புகள்

**வள்ளற் பெருமானார் தம் அன்பர்களுக்கு**
**வரைந்தருளிய கடிதங்களை இப்பகுதியில் காண்போம்**

## இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகம்

நற்குணங்களில் சிறந்து சிவானுபவ விருப்பத்தில் சித்தத்தை வைத்து நமது கண்மணிபோல் விளங்கிய சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு தீர்க்காயுளும் சிவக்கியானமும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவனவாக.

தமது சுப சரித்திர விபவங்களையும் ள-ள-திருவேங்கட முதலியார் முதலாகியவர்களது விபவங்களையும் கேட்க விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன்.

**உய்வதாம் இது நங்குருவாணை ஒன்றுரைப்பேன்**
**சைவமாதி சித்தாந்தத்து மறைமுடித் தலத்தும்**
**நைவதின்றி ஆங்கதுவதுவாய் அது நமது**
**தெய்வமாகிய சிவபரம் பொருள்எனத் தெளிவீர்.**

இங்ஙனம் சிவ பரம்பொருளை அனுபவித்தற்கு முக்கியம் ஜீவகாருண்யம், பாச வைராகம், சிவபத்தி. இவை கிடைத்தற்கு முதற் கருவி சாதுக்கள் சார்பு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்பு வேண்டும். நல்லது, சாதுக்கள் சார்பு தற்காலத்தில் கிடைப்பினும் கிடையாவிடினும் நம்மை எழுபிறப்பென்னும் பெருங்கடலைக் கடப்பித்துப் பேரின்பம் என்னும் கரையிலேற்றும் சைவப் பதியிற் தெய்வப் புணையாக வாய்த்த திருமந்திரமாகிய பஞ்சாக்கிரத்தை இடைவிடாது சிந்தித்துக் கொண்டும், சிவபெருமான் திருவடிகளைப் பாவித்துக் கொண்டும் வருவது முக்கியத்தினும் முக்கியம். ஆகலில் நமக்கு இதுஅவசியம் பற்ற வேண்டிய காரியம். மற்றவைகளைக் குறித்து அறிவிக்க தமது நன்மனத்திற்கு நான் விரிக்க வேண்டுவதில்லை.

இனி திரவிய விஷயத்தில் என்னைக் குறித்து விசேஷ முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டாம். அனுப்பும்படி நேரிட்டால் ரிஜிஸ்டர் செய்து அனுப்ப வேண்டும். நான் அவசியம் பங்குனி மாதத்திற்குள் வந்து சேருவேன். தாம் தேக முதலியவற்றை பக்குவமாகத் திருவருள் சகாயத்தால் காத்தல் வேண்டும். இங்ஙனம் ள-ள-நாயக்கர்வாள் க்ஷேமம். அவர்கள் தாயாரிடத்திலிருந்து ஏதாவது கடிதம் வரில் இங்கே அனுப்ப வேண்டும். வேணும் சிரஞ்சீவி. சிதம்பரம் இராமலிங்கம்



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும் 173**

**அகரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி 174**

**சி**கரமும் – சகரஇகரமாகிய "சி" என்னும் எழுத்தும்

வகரமும் – வகர அகரமாகிய "வ" என்னும் எழுத்தும்

சேர் – சிகர வகரங்கள் சேர்ந்த (சி+வ=சிவ),

**"சிவ" என்னும் மகாகாரண பஞ்சாக்கரமும்**

உகரமும் – உகரம் எனப்படும் "உ" என்னும் எழுத்தும்

**அ**கரமும் – அகரம் எனப்படும் "அ" என்னும் எழுத்தும்

சேர் – அகர உகரம் சேர்ந்த (அ+உ+ம்)

**ஓம் என்னும் ஓங்காரபஞ்சாக்கரமும்**

ஆகிய அருட்பெருஞ்ஜோதி – ஆகிய ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி. இதேபோன்று அகவலில் பின்னோரிடத்திலும் வரும்.

**அ**கரமும் உகரமும் அழியாச் **சி**கரமும்

வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே (1315–16) என்பது அது.

வடலூரில் வள்ளற்பெருமான் சத்தியஞானசபையைக் கட்டி அதில் அருட்பெருஞ்ஜோதிப் பிரதிட்டை செய்து, முதல் தைப்பூச விழா ஜோதி தரிசனத்தை தொடங்கிய நாள் 25.01.1872. அருட்பெருஞ்ஜோதி அகவலை அருளி நிறைவு செய்த நாள் 18.04.1872. முதன்முதலில் சன்மார்க்கக் கொடியைக் கட்டி பேருபதேசத்தைச் செய்து அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தை வழங்கியநாள் 22.10.1873.

அருட்பெருஞ்ஜோதி என்ற சொல், பெயர், வள்ளற் பெருமான் வாக்கில் இரண்டாம் திருமுறையிலேயே ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்திலேயே இடம்பெற்றுவிடுகிறது. **"அடியர் நெஞ்சத்து அருட்பெருஞ்ஜோதி ஓர் படிவமாகும் படம்பக்க நாதரே"** என்பது அது (திருஅருட்பா 721). எனினும், அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தைப் பேருபதேசத்தின் மூலம் பெருமான் வெளிப்படுத்துவதற்குமுன், பஞ்சாக்கர மந்திரத்தில் மிகப்பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். பெருமான் வாக்கில் பஞ்சாக்கரம் மிகப் பல இடங்களில் வந்துள்ளது. பஞ்சாக்கரப் பதிகமே பாடியுள்ளார். அகவலிலும் பஞ்சாக்கரம் இடம் பெற்றுள்ளது. பஞ்சாக்கரத்தை சிறப்பாகக் இரண்டு இடங்களில் குறிப்பிடுகின்றார்.

ஒன்று நாம் உரைகாணும் இந்த இடம்.

சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்
அகரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி 173–74

இதேபோன்ற இன்னொரு இடம்,

அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே 1315–16 என்பது.

இவ்விரண்டில், 'சிகரவகரம் அகர உகரம்' என்பனவற்றை இங்கே ஒரு சிறிது விளக்கமாக அறிதல் நன்று.

சைவத்தில் பஞ்சாக்கரமே உயர்ந்த மந்திரம். அதைவிட உயர்ந்த, சிறந்த, மந்திரம் வேறு இல்லை. மந்திரங்களின் அரசு அது. மந்திரராஜம் எனப்படும்.

**பஞ்சாக்கர வகைகள்**

தூலபஞ்சாக்கரம், சூக்குமபஞ்சாக்கரம் என பஞ்சாக்கரம் இருவகை. ஐந்துவகையாகவும் கூறப்பெறும்.

| | | |
|---|---|---|
| 1. தூலபஞ்சாக்கரம் | – | **ந ம சி வ ய** |
| 2. சூக்கும பஞ்சாக்கரம் | – | **சி வ ய ந ம** |
| 3. காரண பஞ்சாக்கரம் | – | **சி வ ய (சிவயசிவ)** |
| 4. மகாகாரணபஞ்சாக்கரம் | – | **சி வ** |
| 5. மகாமனு | – | **சி** |

சூக்குமமாக போகப்போக எழுத்துகள் குறைந்து, ஈற்றில் சிகரமாகிய ஓரெழுத்துடன் நிற்பதைக் காண்க.

தூல சூக்கும பஞ்சாக்கரங்கள் ஐந்து எழுத்துக்கள்.

காரண பஞ்சாக்கரம் மூன்றெழுத்துக்கள்.

மகாகாரணம் இரண்டெழுத்து.

மகாமனு ஓரெழுத்து. ஒரே ஒரு எழுத்து.

**பஞ்சாக்கரப் பொருள்**

ஐந்து எழுத்துக்களும் வெறும் எழுத்துக்கள் அன்று. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| **சி** | – | சிவம் (பதி) |
| **வ** | – | சத்தி (அருள்) |
| **ய** | – | உயிர் (ஆன்மா) |
| **ந** | – | திரோதம் (மறைப்பு) |
| **ம** | – | மலம் |

ஐந்து எழுத்துகளும் எழுத்துகளாக இன்றி, தனித்தனி பொருள் தந்து நிற்றலின் ஐந்தெழுத்தை **ஐந்துபதம்** என்பதுமுண்டு.

““அந்தியும் நண்பகலும் அஞ்சுபதஞ் சொல்லி’’ என்பது சுந்தரர் தேவாரம் (8066)

**தூல பஞ்சாக்கரம்**

நகரத்தை முதலாக வைத்து **நமசிவய** என்று ஓதுவது தூலபஞ்சாக்கரம்.

தேவார மூவரும் நமச்சிவாயப் பதிகம் பாடியுள்ளனர். வள்ளற்பெருமானும் பாடியுள்ளார்.

வள்ளற்பெருமான் அருளிய திருவருட்பாவில் பஞ்சாக்கரப் பதிகங்கள் நான்கு. இரண்டு பதிகங்கள் தூல பஞ்சாக்கரத்தையும், ஒருபதிகம் சூக்கும பஞ்சாக்கரத்தையும், ஒரு பதிகம் காரண பஞ்சாக்கரத்தையும் கூறுவதாகும்.

தூலபஞ்சாக்கரத்தைக்கூறும் இரண்டு பதிகங்களில் ஒரு பதிகத்திற்கு “நமச்சிவாயப் பதிகம்” என்றே பெயர். 10 பாடல்கள். பாடல்தோறும் “நமச்சிவாயத்தை நான் மறவேனே என்பது மகுடம்.” “பெற்ற தாய்தனை மக மறந்தாலும்....... நமச்சிவாயத்தை நான் மறவேனே” என்னும் ஏழாவது பாடல் புகழ்பெற்ற பாடல். பலராலும் பெருவழக்காகப் பயிலப் பெறும் பாடல். மற்றொரு பதிகத்திற்கு “நற்றுணை விளக்கம்’’ எனப்பெயர். 10 பாடல்கள். பாடல்தோறும் “நமச்சிவாயங்காண் நாம்பெறும் துணையே” என்பது மகுடம். நமச்சிவாயமே துணை என்றதால் நற்றுணை விளக்கம் என்று அப்பதிகம் பெயர் பெற்றது. நமசிவாயமே நல்லதுணை என்பதால் நற்றுணை விளக்கம் எனப்பெயர் பெற்றது.

இவ்விரு பதிகங்களன்றித் திருவருட்பாவில் பல்வேறு இடங்களில் பலபாடல்களில் தூலபஞ்சாக்கரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சூக்கும பஞ்சாக்கரம்**

சிகரத்தை முதலாகவைத்து **சிவயநம** என்று ஓதுவது சூக்கும பஞ்சாக்கரம். சூக்கும பஞ்சாக்கரப் பதிகமாக வள்ளற்பெருமான் பாடியருளிய பதிகத்திற்குப் “புண்ணியவிளக்கம்” என்று பெயர். 11 பாடல்கள். பாடல்தோறும் “சிவாயநம என்று இடு நீறே’’ என்பது மகுடம். சிவாயநம என்று சொல்லித் திருநீறு அணிவதால் உண்டாகும் புண்ணியங்களைக் கூறுவதால் இப்பதிகம் “புண்ணிய விளக்கம்’’ எனப்பெயரிடப் பெற்றுள்ளது. “பாடற்கினிய வாக்களிக்கும் பாலும்சோறும் பரிந்தளிக்கும்” என்று தொடங்கும் முதற் பாடல் அன்பர்களால் பெரிதும் பயிலப்பெற்று விளங்குவது. சந்நிதிகளில் திருநீறளிக்கும் போது பாடப்பெறுவது.

புண்ணியவிளக்கம் என்னும் இச் சூக்குமபஞ்சாக்கரப் பதிகமன்றி திருவருட்பாவில் வேறுபல இடங்களிலும் சூக்குமபஞ்சாக்கரப் பாடல்கள் பல உண்டு.

**தூலபஞ்சாக்கரமும் சூக்குமபஞ்சாக்கரமும்**

தூலபஞ்சாக்கரம் பொது. சூக்குமபஞ்சாக்கரம் சிறப்பு. 'ந'கரத்தை முதலாக வைத்து ஓதப்பெறும் தூலபஞ்சாக்கரம் கருமசித்தியைக் கொடுக்கும். 'சி'கரத்தை முதலாக வைத்து ஓதப்பெறும் சூக்குமபஞ்சாக்கரம் ஞானசித்தியைக் கொடுக்கும்.

**நம்முதல்** ஓரைந்தின் நாடும் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
**சிம்முதல்** உள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகும் சதாசிவந் தானே.

என்னும் திருமூலர் திருமந்திரம் இதனைக் கூறுகிறது (983)

நம்முதல் – 'ந'கர முதலாக ஓதும் தூல பஞ்சாக்கரம் (நமசிவய)
சிம்முதல் – 'சி'கரமுதலாக ஓதும் சூக்கும பஞ்சாக்கரம் (சிவயநம)

மனவாசகங்கடந்தார் அருளிச்செய்த உண்மை விளக்கம் இதனை இன்னும் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது.

**சிவனருள் ஆவிதிரோதமலம் ஐந்தும்**
**அவனெழுத் தஞ்சின் அடைவாம் – இவனின்று**
**நம்முதலா ஓதிலருள் நாடாது நாடுமருள்**
**சிம்முதலா ஓதுநீ சென்று.**

நமசிவாய என்று தூலமாக ஓதினால் அருள்கிடைக்காது. அருள் கிடைக்க வேண்டுமென்றால் சிவாயநம என்று சூக்குமமாக ஓதவேண்டும். உண்மை விளக்கத்தின் 42, 43– ஆம் செய்யுள்களும் இதனையே கூறுகின்றன.

மூவர் பாடிய பஞ்சாக்கரப் பதிகங்களையும், திருமூலர் திருமந்திரத்தில் கூறுவதையும், மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் தூல, சூக்கும பஞ்சாக்கரங்கள் வருமிடங்களையும், வள்ளற் பெருமானது பஞ்சாக்கரப் பாடல்களையும் அனுபவங்களையும் ஊன்றி நோக்கி ஆராயும்போது ஓர் உண்மை புலப்படுகிறது.

**நமச்சிவாய** எனப் பாடுமிடங்கள் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கிப் பாடும் – தோத்திரிக்கும் – இடங்களாகவும், சிவாயநம எனப் பாடுமிடங்கள் தாம் பெற்ற பேற்றைக் கூறும் – அனுபவங்கூறும் – இடங்களாகவும் விளங்குவதைக் காணலாம். – தொடரும்...

**..திருச்சிற்றம்பலம்..**

# உள்ளது உரைத்தல்



**பி**ரம்மா அன்னமாகவும் விஷ்ணு வராகமாகவும் உருவங்கொண்டார் என்பதன் பொருள்: பாச அறிவும், பசு அறிவுமாம்.

ஒரு பொருளைக் காணும் தன்மையுடையது பாச அறிவு.

பொறிபுலன்களாலே அறியப்பட்டது பசு அறிவு – ஜீவ அறிவு.

மலத்தில் அழுந்துவது பாசம். பகுத்தறிவது பசு. மேலும்–கீழும் செல்லுதலால் பாதாளத்திலும், ஆகாசத்திலும் தேடினார் எனச் சொன்னது. மேலும், ஒவ்வொரு வஸ்துவிலும் பதி, பசு, பாச லக்ஷணம் உண்டு. – திருஅருட்பா வசனபாகம்.

## பாடலும் பொருளும்

# திருஅருட்பா எனும் மாமறை

**கற்பங்கள் பலகோடி செல்லத் தீய**
**கனலின்நடு ஊசியின்மேற் காலை ஊன்றிப்**
**பொற்பறமெய் உணவின்றி உறக்க மின்றிப்**
**புலர்ந்துஎலும்பு புலப்பட ஐம்பொறியை ஓம்பி**
**நிற்பவருக்கு ஒளித்துமறைக்கு ஒளித்து யோக**
**நீண்முனிவர்க்கு ஒளித்துஅமரர்க்கு ஒளித்து மேலாம்**
**சிற்பதத்தில் சின்மயமாய் நிறைந்து ஞானத்**
**திருவாளர் உட்கலந்த தேவ தேவே – மகாதேவமாலை (55)**

பல யுகங்கள் சேர்ந்தது ஒரு கற்பம். அப்படிப்பட்ட கற்பங்கள் பல கோடிக்கணக்கில் கழிய அவ்வளவு காலமும் எதையும் பொசுக்கிவிடும் தூய அக்கினியை வளர்த்து அதன் நடுவே ஊசியை நிற்கவைத்து அந்த ஊசியின் மீது காலை ஊன்றி அழகு குறையுமாறு ஆகாரம் எதுவும் உட்கொள்ளாமலும் உறக்கமும் துறந்து, உடம்பு வற்றிப்போனதால் எலும்புகள் அனைத்தும் தெரிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளும் அதன் வழிச் செல்லவொட்டாது அவற்றை அடக்கி கடும் தவம் செய்பவர்கள் கூட இறைவனைக் காண முடியவில்லையாம். அவர்கட்கும் புலப்படாமல் இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றானாம்.

இறைவனைப் பற்றிய விளக்கங்களை அள்ளி அள்ளி வீசும் வேதங்களை அளவறக்கற்ற வேத விற்பன்னர்களாவது இறைவனைக் கண்டு கொண்டனரா எனில் இல்லை; அவர்களும் காணாதவாறு இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றானாம்.

**ஏற்றி இறக்கி இரு காலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறி அதுவாமே (திருமந்திரம்)**

இந்தப் பாடலின் மூலம் காற்றைப் பிடிக்கும் கணக்கை அறிந்தோரால் மரணத்தை ஒழிக்க முடியும் என்று திருமூலர் கூறுகின்றார். இதன் அடிப்படையில் யோகங்கள் பயின்று தங்கள் ஆயுட்காலத்தைப் பலப்பல ஆண்டுகள் பெருக்கி நீண்ட காலம் வாழும் பேறு பெற்றவர்கள் யோகிகள். அவர்கள் வெறும் யோகிகள் மட்டுமல்ல, ஆசைதான் மனிதனை மரணத்திற்கு இட்டுச்

செல்கின்றது என்பதை உணர்ந்து மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழாசை முதலிய எல்லா ஆசைகள் மீதும் முனிந்த - கோபித்த முனிவர்கள் ஆவர். அவர்களும் இறைவனைக் கண்டோர் அல்லர். இறைவன் அவர்கட்கும் ஒளித்துக் கொண்டானாம்.

"அறிவினது உயர்ச்சியாலும் தாழ்ச்சியாலும் தேவரென்றும் மனிதரென்றும் சொல்லப்பட்டதே தவிர வேறு எந்தக் காரணத்தினாலும் அல்ல" என்பது வள்ளலார் கூற்று. அந்த தேவர்களாவது இறைவனைக் கண்டார்களா எனில் இல்லை. இறைவன் அவர்கட்கும் ஒளிந்துள்ளாம்.

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய கனலின் நடு ஊசியின் மேல் காலை ஊன்றி உணவின்றி உறக்கமின்றி எலும்பு புலப்பட கடுந்தவம் செய்தோரும் காணவில்லை. அமரர்களாலும் காணமுடியவில்லை. அவ்வாறெனில் இறைவன் யாராலும் காணமுடியாத ஒரு கற்பனைப் பொருள்தானா என்றால் இல்லை.

வேறு எவ்விதம்தான் கடவுளைக் காண்பது என்ற நம் ஐயத்திற்கு நம் பெருமானாரே வழிகாட்டுகின்றார்.

"ஜீவகாருண்யம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்; அதனால் உபகார சத்தி விளங்கும்" என்பார் நம் வள்ளல் பெருமானார். மேலும் "பெரிய தயவுடைய அறிவே அருட்பெருஞ்ஜோதி" என்றும் அருளியுள்ளார். இதைக்கொண்டு பார்க்கப்போனால் யாரொருவர் ஜீவகாருண்ய ஒழுக்க நெறியில் நின்று தன் மனதை எவ்வித அசுத்தப் பழக்கத்தின் வழி செல்ல வொட்டாது தூய தயவோடு கூடிய அறிவு மயமாய் விளங்கும் திருவாளர் உள்ளத்தில் மட்டுமே இறைவன் கலந்து விளங்குவதாக நம் பெருமானார் அருளியுள்ளார்.

எனவே நாமும் வள்ளல் பெருமானார் காட்டிய ஜீவகாருண்ய ஒழுக்க நெறியில் நின்று தனித்தலைமைப் பெரும் பதியாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளைப் பெற்று பேரின்பம் எய்துவோமாக!

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம்உயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துஉரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர்அவர் உளந்தான்** *சுத்த*
*சித்துஉருவாய்* **எம்பெருமான் நடம்புரியும்**
**இடம்எனநான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்குஏவல் புரிந்திடஎன்**
**சிந்தைமிக விழைந்த தாலோ.** **– திருஅருட்பா**

# திருமந்திரம்



**ஓடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்**
**நடுங்குவது இல்லை, நமனும் அங்கு இல்லை,**
**இடும்பையும் இல்லை, இராப் பகல் இல்லை,**
**படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே. – பகலறியார், இரவறியார்**

திருவருளில் ஒடுங்கி, சிவானுபவத்தில் நிலைபெற்ற (சீவன் முத்தி பெற்ற) உயர்ந்தோர், இறப்பை எண்ணி அஞ்சி நடுங்குவதில்லை. அவர்கட்கு இறப்பு இல்லை. பிறவித் துன்பம் இல்லை. அவர்களின் சிவானுபவத்தின்போது, காலக்கழிவை அவர்கள் அறியார். அவர் தாம் செய்யும் உலகியற் செயல்களில் பற்றின்றிச் செய்தலால், வினைப் பயன் அவரைச் சேர்வதில்லை.

ஒடுக்கம், புலன் ஒடுக்கமன்று. அருளில், ஆன்ம உணர்வும் ஒன்றி இருத்தல். நடுங்குதல் – அஞ்சுதல் மட்டுமன்று, வேறு எண்ணம் கொள்ளுதலும் (மனச்சலனம்) ஆகும். இரவு, பகல் மாறி வருவதை உணரார் ஆதலின், 'இராப் பகல் இல்லை' என்றார். அதனால், பொருள்கள் இடையே உள்ள வேறுபாடும் உணரார் என்று கொள்க, 'ஒன்று என்று இருப்பார்' அவர் ஆதலின்.

**மானுட ராக்கை வடிவு சிவலிங்க**
**மானுட ராக்கை வடிவு சிதம்பர**
**மானுட ராக்கை வடிவு சதாசிவ**
**மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. – உடம்பே இலிங்கம்**

மனித உடலின் அமைப்பு இலிங்கம் போன்றது. சிதம்பரம் என்னும் ஆகாயத்தானம் உடம்பின் தலையுச்சியில் உள்ளது. சக்தியும் சிவமும் உடம்பில் உறைகின்றனர். உடம்பின் ஆதாரத் தானங்களில் இறைவனின் திருக்கூத்தை – சோதியை – காணலாம்.

**அறிவில் அணுக அறிவு – அது நல்கிப்**
**பொறிவழி ஆசை புகுத்தி, புணர்ந்திட்டு,**
**அறிவு – அது ஆக்கி, அடியருள் நல்கும்**
**செறிவொடு நின்றார் சிவம் ஆயினாரே. – திருவருள் செய்வது என்ன?**

பேரறிவுப்பொருளாகிய சிவத்தைச் சார்ந்து நிற்பதற்குரிய பதிஞானம் விளையச் செய்து, அதுகாறும் பொறிபுலன்களின் வழியே ஓடிய இச்சை போன்றதோர் இச்சையைச் சிவத்திடம் கொள்ளச்செய்து (இதுவே நாயக நாயகி நிலை) தானும் ஆன்மாவோடு கலந்து, அதனை அறிவுருவாக்கி, அடியாருடன் கூட்டும் தன்மையை உடையது திருவருள். அதனைப் பெற்ற அன்பர் சிவமே ஆகுவர்.

## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

**காலை உணவிற்கு - ரூ.2,500/- மதிய உணவிற்கு - ரூ.6,500/-**

**இரவு உணவிற்கு - ரூ.3,500/-**

**மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-**

**பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-**

**பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,500/-**

**அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்**

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

Please donate - Cheque / DD In favour of

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

Please donate through: **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

## Please send MO to:

அருள்திரு பாபு சாது
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை
கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,
திருஅண்ணாமலை - 606 604.

தொடர்புக்கு: **+91 9443489849, +91 9942776351**

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:- **8012680865, 7502026565**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# கோசாலை



அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்
கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு: 8883590659, 7502026565**



## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

– சன்மார்க்க மாதஇதழ்

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற "வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு" மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள்

ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் சந்தாதாரராக்கி அறிவு தானம் செய்து பயனடையுங்கள். தொடர்புக்கு: **8012680865**

**ஆண்டு சந்தா ரூ.120/-**     **5 வருட சந்தா ரூ.600/-**

Follow us on:

www.vallalarmission.org    www.fasebook.com/vallalarmission

vallalartrust@gmail.com    Group name: vallalarmission Cell no :9942775351

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly December 2016, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/7485?/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

நாள் 29 ஜனவரி

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சிற்சபைத் திகழ்வ சித்தியே

**நாள்: 29-1-2017, ஞாயிற்றுக் கிழமை**

**இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.



**நிகழ்ச்சி நிரல்:**

- அகவல் பாராயணம்
- திருவருட்பா இசைக்கச்சேரி:- வழங்குபவர்
  திரு. கு. சற்குருநாதன் ஓதுவார், உடுமலை.
- சத்சங்கம்:- வழங்குபவர்
  சாது அருணை அவர்கள், திருவண்ணாமலை.
- ஜோதி தியானம்
- அன்னதானம்

**அனைவரும் அருள் பெற வாரீர்! வாரீர்!!**

தொடர்புக்கு: +91 9843644523, +91 9443489849

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

**சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865**